## கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

## வட மாகாண கலை, இலக்கிய, நாடக மன்றங்கள் மற்றும் மரபுரிமைகளின் பாதுகாப்பு, மரபுரிமை முகாமைத்துவச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அமைப்புக்களை பதிவிற்குட்படுத்துதல், பதிவுகளைப் புதுப்பித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள்

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பிரதேச செயலகங்களூடாக இதுவரை காலங்களும் பதிவுசெய்து செயற்பட்டு வருகின்ற, பதிவுசெய்யப்படாத மற்றும் இத்திணைக்களத்தில் பதிவுசெய்துகொள்வதற்கு விரும்புகின்ற மேற் குறிப்பிடப்பட்ட அமைப்புக்களது தலைவர்களில் ஆர்வமுடையோர் கீழ்க்காணும் விதிமுறைகளுக்கமைவாக தத்தமது விண்ணப்பங்களினை எமக்கு அனுப்பி வைக்க முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இச்செயற்பாடானது 2019/01/01 இல் இருந்து 2019/03/31 வரை நடைமுறையில் இருக்கும் என்பதுடன் கீழ்க் குறிப்பிடப்படும் விதிமுறைகளைக் கவனத்திலெடுத்து தங்கள் கலை மன்றங்களின் பதிவினை மேற்கொள்ளுதல் அல்லது மீள்பதிவிற்குட்படுத்துதல் என்பனவற்றை தாங்கள் மேற்கொள்ள முடியும்.

## புதிய மன்றப் பதிவிற்காக பின்பற்றவேண்டிய நடைமுறைகள்

**மன்றங்களின் நோக்கங்கள்:-**

வட மாகாணத்தின் கலை இலக்கிய மேம்பாட்டிற்கு உரிய பங்களிப்பினை வழங்குவதுடன் தரமான கலைஞர்களை உருவாக்குவதும் அதனூடாக சிறந்த தரமான கலைப் படைப்புக்களைப் பெற்றுக் கொள்வதனூடாக ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்கி தேசியமட்டத்தில் மாகாணத்தின் பண்பாட்டுப் பெறுமானத்தினை உயர்த்துதல்.

1)விண்ணப்பப் படிவம் இரண்டு பிரதிகள்.

2)திணைக்களத்தினால் வழங்கப்படும் அமைப்புத்திட்ட விதிமுறை பதிவிற்கு மிகவும் அவசியம்.

3)பதிவிற்காக விண்ணப்பிக்கும் மன்றம் அல்லது அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் நிறைவாக செயற்பட்டித்தல் வேண்டும்.

4)புதிய மன்றங்களை ஆரம்பிக்க விரும்புபவர்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தர் பிரசன்னத்துடன் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டபின் உருவாக்கப்படல் வேண்டும்.

5)பொதுக்கூட்ட அறிவித்தலுக்கான 14 நாட்கள் முன்னறிவித்தல் மற்றும் அறிவித்தல் துண்டுப் பிரசுரங்களை பொதுவிடங்களான ஆலயம், கிராம அலுவலர் பிரிவு, கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற இடங்களில் காட்சிப்படுத்தப்படல் வேண்டுமென்ற விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

6)பொதுக் கூட்ட அறிக்கை, மாதாந்த செயற்குழு அல்லது நிர்வாகக்குழு அறிக்கைகள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கக் கூடியதான முறையில் ஒழுங்காகப் பேணப்படல் வேண்டும்.

7) நிதி நடவடிக்கைகள் தொடர்பானவை

i வங்கிக் கணக்கு இலக்கம்(இருப்பின்) இல்லாவிடின் மன்றம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் பதிவு இரத்துச் செய்யப்படும்.

ii- மாதாந்த கணக்கு விபரங்கள் மற்றும் வரவுசெலவு விபரங்களின் பதிவேடுகள் பேணப்பட்டு மூன்று மாதங்களுக்கொருமுறை கலாசார உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல் கட்டாயமானது.

8)திணைக்களத்தின் வேலைத்திட்டங்களோடு இணைந்து பணியாற்றுதல் அவசியமானதுடன் தரமான கலை நிகழ்வுகளை வழங்குவதும் திணைக்களத்தின் நிகழ்வுகளில் கலந்துகொள்வதும் இன்றியமையாதது.

9)திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் விழாக்கள், வைபவங்கள், நிகழ்வுகளில் கலை நிகழ்வுகளை அரங்கேற்றுதல், செயற்திட்டங்களில் பங்கெடுத்தல் ஆகியவற்றிற்கு சந்தர்ப்பம் வழங்குதல் திணைக்களத்தில் பதிவுசெய்த மன்றங்களிற்கு மட்டுமே வழங்கப்படும்.

10)பதிவிற்கு விண்ணப்பம் கிடைத்தவுடன் மாகாணமட்ட பரிசோதனைக் குழுவின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மன்றத்தின் பதிவு தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

**பதிவுகளை புதுப்பித்தல் தொடர்பானவை:-**

இதுவரை பதிவு செய்யப்பட்ட மன்றங்கள் யாவும் தங்களது பதிவுகளை புதுப்பித்தல் கட்டாயமானது. தங்கள் மன்றத்தின் செயற்பாட்டினை கலாசார உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

- புதுப்பித்தலுக்காக பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- இறுதியாக நடந்த பொதுக்கூட்ட அறிக்கை
- கடந்த மாத அறிக்கை
- கடந்த ஆண்டின் கணக்கு அறிக்கை, வங்கி மீதி அறிக்கை
- செயற்பாட்டு அறிக்கைகள் இவை யாவும் கலாசார உத்தியோகத்தினரின். உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 2019/03/31 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணத்திற்காகவும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

உதவிப்பணிப்பாளர், (பதில்)
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்குமாகாணம்.

உதவிப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்

ஒப்பம் : திரு.சி.சத்தியசீலன்
செயலாளர்